# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 132/மா/2017

ஆணை எண். 143/2017

நாள் : 13/06/2017

**திரு . அ. மைக்கேல்,**
**பொன்மலை,**
**திருச்சிராப்பள்ளி – 620 004.** – முறையீட்டு மனுதாரர்

மாவட்ட ஆட்சியர்,
திருச்சிராப்பள்ளி. – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை, திருநகர், 145–முதல் தெருவில் வசிக்கும் திரு அ. மைக்கேல் அவர்களது 06.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.03.2017 அன்று பெறப்பட்டு, 132/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை, திருநகர், 145–முதல் தெருவில் வசிக்கும் திரு அ. மைக்கேல் என்பவர் "மொனரஸ் சிட்டி" என்ற நிறுவனம் சம்பந்தமான சில குற்றச் சாட்டுக்களைத் தெரிவித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். 2014–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(1) ன் கீழ், பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது என, அரசிடமிருந்து பெறப்பட்ட அல்லது முறைமன்ற நடுவரிடம் வந்திருக்கிற எழுத்து வடிவிலான முறையீடு எதனையும் விசாரணை செய்வது முறைமன்ற நடுவரின் செயற்பணிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படிச் சட்டம், பிரிவு 2(11)–ல் "பொதுப்பணியாளர் என்றால் தலைமையர் அல்லது துணைத் தலைமையர், மேயர் அல்லது துணை மேயர் உள்ளடங்கலாக உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் என்று பொருள்படும் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை உள்ளடக்கும்." மனுவில்

கூறப்பட்ட 4 வது புகார் பற்றி உரிய படிவத்தில் ரூ.10/– முத்திரைக் கட்டண வில்லையொட்டி தனித்தாளில் புகார் விவரங்களை தெரிவித்து உரிய முறையில் தனியே மனு செய்யப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட பிரிவின் படி மாவட்ட ஆட்சியர், உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரோ அல்லது உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலரோ அல்ல. எனவே, முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து, எதிர்மனுதாரரான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மீது, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவுகளின் கீழ் இந்த அமைப்பு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. அ. மைக்கேல்,
143 – முதல் தெரு,
திரு நகர், பொன்மலை,
திருச்சிராப்பள்ளி – 620 004.

2. மாவட்ட ஆட்சியர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
திருச்சிராப்பள்ளி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்